**JUDICIAL MAGISTRATE COURT NO.1, PERAMBALUR**
**PRESENT: THIRU.R.RAJASEKARAN, L.L.M.,**
**Judicial Magistrate No.1 (FAC),**
**Perambalur.**

**CASE SUMMARY**

**C.C.53/2025, CNR NO.TNPB02-000309-2025**

| | | |
|---|---|---|
| 1. | The Period of remand of the accused | A1 Accused arrested on 10.01.2025 and released on 29.05.2025<br>A2 Accused arrested on 01.09.2024 and released on 16.10.2024 |
| 2. | The date of filing of the complaint/final report in the court | 12.02.2025/17.02.2025 |
| 3. | The date of committal of the case to the Court of Session | --- |
| 4. | The date of questioning of the accused u/s.228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | 21.05.2025 |
| 55. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts; except routine petitions like petitions u/s.317 of the code | NIL |
| 6. | Date of examination in chief and cross examination of a witness | PW1 Chief & Cross examined on 04.06.2025<br>PW2 Chief & Cross examined on 04.06.2025<br>PW3 Chief & Cross examined on 25.02.2026<br>PW4 Chief & Cross examined on 25.02.2026<br>PW5 Chief & Cross examined on 04.03.2026 |
| 7. | Date of examination of the accused u/s.313(1)(b) of Cr.P.C | 11.03.2026. |
| 8. | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; and | NIL |
| 9. | Grant of stay by superior courts and the results thereof | NIL |

*(Sd/-).R.Rajasekaran*
Judicial Magistrate No.1 (FAC),
Perambalur.

Date:11.03.2026 JM-1, Perambalur

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, பெரம்பலூர்**

**முன்னிலை : திரு.இரா.இராஜசேகரன், எல்.எல்.எம்.,**
**நீதித்துறை நடுவர் எண்.1 (மு.கூ.பொ.),**
**பெரம்பலூர்.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள் புதன்கிழமை

**2057** திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் மாசி மாதம் **27** ம் நாள்

ஆண்டுபட்டிகை வழக்கு எண்.**53/2025**
**CNR NO.TNPB02-000309-2025**

தமிழ்நாடு அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
பெரம்பலூர் காவல் நிலையம்,
குற்ற எண்.661/2024 – குற்றமுறையீட்டாளர்.

/ எதிர் /

1.ராஜீவ் (எ) டால்டா கண்ணன் (35/2025)
த/பெ.செல்வராஜ்
எண்.327, புதிய காலனி,
ஆலம்பாடி ரோடு,
பெரம்பலூர் நகரம், வட்டம் மற்றும் மாவட்டம்.

2.சந்தோஷ்குமார் (28/2025),
த/பெ.சந்திரசேகர்,
இந்திரா நகர்,
GH பின்புறம்,
பெரம்பலூர் நகரம், வட்டம் மற்றும் மாவட்டம். – எதிரிகள்

இந்த வழக்கு கடந்த 17.02.2025 ஆம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு, என் முன்னால் 11.03.2026 ஆம் தேதியான இன்று இறுதி விசாரணைக்கு வந்ததில், அரசு தரப்பில், அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.கார்த்திக் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற சீரிய பரிசீலனையில் இருந்து, இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்** :

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் பழனிசாமி எலக்ட்ரீசியன் வேலை செய்து வருவதாகவும், அவர் கடந்த 26.08.2024ம் தேதி இரவு வேலை முடித்து அங்காயி கோவிலுக்கு செல்லும் வழியில் உள்ள நாககண்ணி அம்மன் கோவில் அருகே இரவு 7.30 மணிக்கு நடந்து சென்றபோது புகார்தாரர் வீட்டின் அருகே குடியிருக்கும் சுப்ரமணியன் மகன் சாட்சி சுரேஷ் என்பவர் நின்று கொண்டிருந்த போது அவரிடம் இவ்வழக்கின் எதிரிகள் இருவரும் பேசிக்கொண்டு புகார்தாரர் பழனிசாமி நடந்து வருவதை பார்த்து டேய் இங்க வாடா என்று சொன்னபோது புகார்தாரர் அருகே சென்றபோது டேய் பாக்கெட்டில் எவ்வளவு பணம் வைத்திருக்க எடுத்துக் கொடுடா என்று கேட்டபோது புகார்தாரர் எதற்கு பணம் தரனும் என்று கேட்டபோது திடீரென 1வது எதிரி அவரது இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து காட்டி அச்சுறுத்தி மிரட்டி புகார்தாரர் சட்டைமேல் பாக்கெட்டில் வைத்திருந்த சாம்சங் A-2 செல்போன் மற்றும் பணம் ரூ.1000/-ஐ பறித்தபோது புகார்தாரர் சத்தம் போடவே டூவிலரில் இருந்த 2வது எதிரி, டேய் என்னடா சத்தம் போடுற என்று மிரட்டிய குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே 1, 2 எதிரிகளின் செய்கையானது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 309(4)-ன் கீழ் தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளதாக பெரம்பலூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் 1, 2 எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2) பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 230ன் கீழ் நகல் வழங்குதல்:**

1, 2 எதிரிகளுக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். 1, 2 எதிரிகளுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 230ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3) குற்றச்சாட்டு வனைந்து குற்றம் பற்றி வினவுதல்**

1, 2 எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் அளித்து அதன் பின்னர் ஆவணங்களின் பரிசீலனையின் பேரில், எதிரிகளின் மீது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 309(4)-ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கி கூறி வினவியபோது,

1, 2 எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டை மறுத்து வழக்கு விசாரணை வேண்டினார். அதன் பின்னர் அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**4) அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விவரம்:**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.4 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப் பட்டுள்ளன. 1, 2 எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ குறியீடு செய்யப்படவில்லை.

**5) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம்:**

5) (i) அரசு தரப்பில் நிகழ்நிலை புகார்தாரர் பழனிசாமி என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியாது. மற்றொரு எதிரி டால்டா கண்ணன் என்பவரையும் தெரியாது. சாட்சி சுரேஷ் என் நண்பர். என்னிடம் யாரும் கத்தியை காட்டி மிரட்டி செல்போன் மற்றும் பணம் ஆகியவற்றை பறித்து செல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனுவில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5) (ii) அரசு தரப்பில் வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.1ன் நண்பர் சுரேஷ் என்பவர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.2 தனது நீதிமன்ற சாட்சியத்தில், ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. மற்றொரு எதிரி டால்டா கண்ணன் என்பவரையும் தெரியாது. அ.சா.1ஐ எனக்கு தெரியும். அ.சா.1 எதற்காக காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்று தெரியாது. எனக்கு இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5) (iii) அரசு தரப்பில் 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக இருந்த நபர்களான பாலமுருகன் மற்றும் ராஜா ஆகியோர் முறையே அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி அ.சா.3, அ.சா.4 ஆகியோர் தங்கது நீதிமன்ற சாட்சியத்தில், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள

கையொப்பம் தங்களுடையதுதான் என்றும், சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக தேதி, மாதம் தனக்கு நினைவில்லை என்றும், பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் வைத்து தங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், அதில் என்ன எழுதியிருந்தது என்று தங்களுக்கு தெரியாது என்றும், தங்கள் முன்னிலையில் யாரையும் கைது செய்யவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை என்றும், தங்கள் முன்னிலையில் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றும், போலீசார் விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

5) (iv) அரசு தரப்பில் இவ்வழக்கை புலன் விசாரணை செய்த காவல் ஆய்வார் திரு.சதீஷ்குமார் என்பவர் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.5 தனது நீதிமன்ற சாட்சியத்தில், அ.த.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.த.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

**6) பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 351(1)(ஆ)வின் கீழ் வினவுதல் :**

அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிந்த பின்னர், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளை விளக்கி கூறி பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 313(1)(ஆ)வின் கீழ் விசாரித்த போது எதிரிகள் சாட்சிகள் கூறியது பொய் என்று தெரிவித்துள்ளார். மேலும் எதிரிகள் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சியம் இல்லை என தெரிவித்தார்.

**7) அரசுத் தரப்பு வாதம்:**

கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை 1, தனது வாதத்தின் போது, அரசு தரப்பு சாட்சிகள் எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதாலும், மேலும், சான்றாவணங்கள் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.7 வரையில் குறியீடு செய்யப் பட்டுள்ளதாலும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டு தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதம் செய்துள்ளார்.

**8) எதிரிகள் தரப்பு வாதம் :**

1, 2 எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தின் போது, அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் புலன் விசாரணை அதிகாரியிடம் விசாரணையின் போது கொடுத்த வாக்குமூலத்திற்கு முரண்பட்டு

சாட்சியம் அளித்துள்ளதாலும், தனிநபர் சாட்சி யாரும் 1, 2 எதிரிகள்தான் மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று சாட்சியம் அளிக்கவில்லை என்றும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 சாட்சியத்தின் அடிப்படையில் 1, 2 எதிரிகள் குற்றவாளிகள் என தீர்மானிக்க போதுமான சாட்சிய சான்றாவணங்கள் இல்லாத நிலையில், 1, 2 எதிரிகள் மீதான அரசு தரப்பு வழக்கு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று வாதம் செய்துள்ளார்.

**9)** இந்த வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், 1, 2 எதிரிகளின் மீதான பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 309(4)-ன் கீழான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய சங்கதிகள் ஆகும்.

## தீர்வு

**10)** இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் சம்பவம் குறித்து நீதிமன்றம் நம்பத்தகுந்த வகையிலும், எவ்வித முரண்பாடுகள் இல்லாமலும், பொருண்மையை ஒரேவிதமாக குறிப்பிட்டு அமைய வேண்டும். அந்த வகையில் இவ்வழக்கின் சாட்சியங்கள் மேற்படி வகைமுறைகளுக்கு உட்பட்டு அமைந்திருக்கிறதா? என்பதே பரிசீலிக்கப்பட வேண்டும்.

**11) (i)** அ.சா.1 தனது புகார் மனுவில் "26.08.2024ம் தேதி இரவு எனது வேலை முடித்து அங்காயி கோவிலுக்கு செல்லும் வழியில் உள்ள நாககண்ணி அம்மன் கோவில் அருகே இரவு 7.30 மணிக்கு நடந்து வந்தபோது அங்கு எனது பக்கத்து வீட்டின் அருகே குடியிருக்கும் சுப்ரமணியன் மகன் சுரேஷ் என்பவர் நின்றுகொண்டிருந்தார். அவரிடம் ஆலம்பாடி ரோடு வாட்டர் டேங்க் அருகே குடியிருக்கும் டால்டா கண்ணன் மற்றும் பெரம்பலூர் இந்திரா நகரை சேர்ந்த சந்தோஷ் இருவரும் டூவீலரில் நின்று கொண்டு சுரேஷிடம் இருவரும் பேசிக்கொண்டு இருந்தார்கள். நான் நடந்து வருவதை பார்த்து Block Clolour R15 டூவீலரில் பின்னால் உட்காந்து இருந்த டால்டா கண்ணன் என்னை டேய் இங்க வாடானு சொன்னான். நான் அருகே சென்றபோது எனது சட்டை மேல் பாக்கெட்டில் நான் வைத்திருந்த சாம்சங்க் A-2 செல்போன் மற்றும் பணம் ரூபாய் 1000/-ஐ

பறித்துக்கொண்டான். நான் சத்தம் போடவே R15 டூவீலரில் இருந்த சந்தோஷ் டேய் என்னடா சத்தம் போடுறனு மிரட்டிவிட்டு டூவீலரை சந்தோஷ் ஓட்டிக்கொண்டும் அந்த டூவீலரிலேயே வேகமாக ஆத்தூர் ரோட்டில் சென்று விட்டார்கள்" என குறிப்பிட்டுள்ளார். ஆனால் பின்னிட்டு அ.சா.1 தனது சாட்சியத்தில் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

**11) (ii)** அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில், எதிரிகளை தெரியாது என்றும், தன்னிடம் யாரும் கத்தியை காட்டி மிரட்டி செல்போன் மற்றும் பணம் ஆகியவற்றை பறித்து செல்லவில்லை என்றும், என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்த தன்னுடையதுதான் என்றும், அந்த புகார் மனுவில் உள்ள விவரங்க்ள் தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1 ஐ அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்கையிலும், எதிரிகள்தான் அ.சா.1 இடமிருந்து செல்போன் மற்றும் பணம் ரூ.1000/-ஐ பறித்து சென்றார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, அ.சா.1 அரசு தரப்பு வழக்கை ஒத்துரைக்கும் விதமாக சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11) (iii)**மேலும், அரசு தரப்பில் கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.1ன் நண்பர் சுரேஷ் என்பவர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.2 தனது நீதிமன்ற சாட்சியத்தில், எதிரிகளை தெரியாது என்றும், அ.சா.1 எதற்காக காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்று தெரியாது என்றும், தனக்கு இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.2 ஐ அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்கையிலும், எதிரிகள்தான் அ.சா.1 இடமிருந்து செல்போன் மற்றும் பணம் ரூ.1000/-ஐ பறித்து சென்றார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, அ.சா.2 அரசு தரப்பு வழக்கை ஒத்துரைக்கும் விதமாக சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11) (iv)**மேலும், அரசு தரப்பில் 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திற்கு சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட பாலமுருகன் என்பவர் அ.சா.3 ஆகவும்,

ராஜா என்பவர் அ.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர் தங்களது நீதிமன்ற சாட்சியத்தில், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தங்களுடையதுதான் என்றும், சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக தேதி, மாதம் தனக்கு நினைவில்லை என்றும், பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் வைத்து தங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், அதில் என்ன எழுதியிருந்தது என்று தங்களுக்கு தெரியாது என்றும், தங்கள் முன்னிலையில் யாரையும் கைது செய்யவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை என்றும், தங்கள் முன்னிலையில் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர்களை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்கையிலும், தங்கள் முன்னிலையில் 1வது எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியதாகவோ, அதற்கு தாங்கள் சாட்சிகளாக இருந்ததாகவோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர் அரசு தரப்பு வழக்கை ஒத்துரைக்கும் விதமாக சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**12)** மேற்படி அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களை நன்கு பரிசீலனை செய்கையில், இவ்வழக்கில் செல்போன் மற்றும் பணம் ரூ.1000/-ஐ பறிகொடுத்த நபரான அ.சா.1 தனது சாட்சியத்தில், தன்னிடம் யாரும் கத்தியை காட்டி மிரட்டி செல்போன் மற்றும் பணம் ஆகியவற்றை பறித்து செல்லவில்லை என்றும், புகார் மனுவில் உள்ள விவரங்கள் தனக்கு தெரியாது என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரணாக பிறழ் சாட்சியம் அறித்துள்ளார். மேலும், வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில், இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரணாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான அ.சா.3 மற்றம் அ.சா.4 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், பெரம்பலூர் அரசு மருத்தவமனையில் வைத்து போலீசார் தங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றும், அதில் என்ன எழுதியிருந்தது என்று தங்களுக்கு தெரியாது என்றும், தங்கள் முன்பாக யாரையும் கைது செய்யவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை என்றும், எந்த

பொருளையும் கைப்பற்றவில்லை என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரணாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி 1 முதல் 4 வரையிலான சாட்சிகள் அரசுத் தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல், அரசுத் தரப்பிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள், எனவே, மற்ற சாட்சிகள் அரசு தரப்பால் நீக்கறவு செய்துகொண்டு புலன் விசாரணை அதிகாரியான திரு.சதீஸ்குமார், காவல் ஆய்வாளர் அ.சா.5 ஆக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார்.

**13)** மேலும், நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் அரசுத் தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக் கொண்டு எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு நியாமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, 1, 2 எதிரிகளுக்கு எதிரான பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 309(4)–ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கபடவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**14)** இறுதியாக, 1, 2 எதிரிகளின் மீதான பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 309(4)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக நியாயமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை 1, 2 எதிரிகளுக்கு அளித்து, 1, 2 எதிரிகளை மேற்கூறிய பிரிவின் கீழான குற்றச்சாட்டின் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, 1, 2 எதிரிகளை பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**15)** 1 மற்றும் 2 எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் இரத்து செய்யப்பட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

**16)** இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் இல்லை என்பதால், அது குறித்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறியப்பகரப்பட்டது.

*(ஒம்/−).இரா.இராஜசேகரன்*
நீதித்துறை நடுவர் எண்.1 (மு.கூ.பொ.),
பெரம்பலூர்.

**இணைப்பு**

**1. அரசு தரப்பில் விசாரித்துக்கொள்ளப்பட்ட சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | -- | திரு.பழனிச்சாமி (நிகழ்நிலை புகார்தாரர்) |
| அ.சா.2 | -- | திரு.சுரேஷ் |
| அ.சா.3 | -- | திரு.பாலமுருகன் |
| அ.சா.4 | -- | திரு. ராஜா |
| அ.சா.5 | -- | திரு. சதீஷ்குமார் (காவல் ஆய்வாளர்) |

**2. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | -- | புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் |
| அ.த.சா.ஆ.2 | -- | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.3 ன் கையெழுத்து |
| அ.த.சா.ஆ.3 | -- | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் கையெழுத்து |
| அ.த.சா.ஆ.4 | -- | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.5 | -- | மாதிரி வரைபடம் |

**3. அரசு தரப்பு சான்று பொருட்கள் : இல்லை.**
**4. எதிரிகள் தரப்பு சாட்சி : இல்லை.**
**5. எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை.**
**6. எதிரிகள் தரப்பு சான்றுபொருட்கள் : இல்லை**

*(ஒம்/−).இரா.இராஜசேகரன்*
நீதித்துறை நடுவர் எண்.1 (மு.கூ.பொ.),
பெரம்பலூர்.

குறிப்பு

1. விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

Particulars Under Rule 106 of Criminal Rules of Practice 2019
Description of the accused

| SNo. | Cr.No. | Name of the Police | Name of the accused | Father's name | Occupation | Residency | Age |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 661/2024 | Perambalur PS | Rajeev @ Dalda Kannan | S/o.Selvaraj | -- | Perambalur | 35/2025 |
| 2. | 661/2024 | Perambalur PS | Santhoshkumar | S/o.Chandrasekar | -- | Perambalur | 28/2025 |

Date of

| Occurrence | complaint | Apprehension | Release on bail | Commit ment | Commence of Trial | Close of trial | Sentence or order | Service of copy of Judgment on accused | Explan ation of delay |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 26.8.2024 | 27.8.2024 | A1-10.1.2025<br>A2-01.9.2024 | A1-29.5.2025<br>A2-16.10.2024 | Not applicable | 04.06.2025 | 11.03.2026 | 11.03.2026 | - | No delay |

Judgment typed and Uploaded by – Steno Typist – Gr.III – M.Selvaraju

Date:11.03.2026 JM-1, Perambalur